புதுச்சேரி அரசு
செய்தி மற்றும் விளம்பரத்துறை

# புதுச்சேரி விடுதலைத் திருநாள் விழா - 2024

புதுச்சேரி விடுதலைத் திருநாளை முன்னிட்டு
மாண்புமிகு முதலமைச்சர்
திரு. **ந.ரங்கசாமி** அவர்கள்
2024-ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள்
வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில்
**குபேர் சாலையில் (கடற்கரைச் சாலை) உள்ள காந்தி திடலில் தேசியக் கொடியை**
ஏற்றிவைத்து காவலர் அணிவகுப்பு மரியாதையை
ஏற்றுக்கொள்ளும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

அனைவரும் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்க அன்புடன் அழைக்கிறோம்.

இவண்
மரு. **சரத் சவுகான்,** இ.ஆ.ப.
தலைமைச் செயலர்

**குறிப்பு :**

- புதிய பேருந்து நிலையத்திலிருந்து விழா நடைபெறும் இடத்திற்கு பேருந்து வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றவர்கள் காலை 8.30 மணிக்கு முன்னதாக தங்கள் இருக்கையில் அமரவும்.
- கைப்பையோ, உணவுப் பொட்டலமோ அல்லது மற்ற பொருட்களையோ கொண்டுவர வேண்டாம்.

புதுச்சேரி விடுதலைத் திருநாளை முன்னிட்டு சுற்றுலாத்துறை சார்பில் 01-11-2024 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில் குபேர் சாலை (கடற்கரைச் சாலை), மேரி கட்டடம், தரைதளத்தில் அமைக்கப்பட்டுள்ள "புதுச்சேரி வரலாறு" புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

No.231024/DIP/AD(PRESS)/PRA/2024-25 வெளியீடு: செய்தி மற்றும் விளம்பரத்துறை, புதுச்சேரி



# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் ஐப்பசி 13 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 ரபிஉல் ஆகிர் 26

மாநிலம் பயனுற!

• புதுச்சேரி • புதன்கிழமை, அக்டோபர் 30, 2024 • வெளியூர்: 31-10-2024, வியாழக்கிழமை

RNI.REG.NO.PONBIL/2015/68788 • Volume - 10 • Issue - 114 • 6 பக்கம் • ரூ.6


## 117வது ஜெயந்தி மற்றும் குருபூஜை விழா

# முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை

## மருது சகோதரர் சிலைகளுக்கு மாலை அணிவித்தார்

**கமுதி, அக். 30-**

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே உள்ள பசும்பொன்னில் முத்துராமலிங்கத்தேவரின் 117வது ஜெயந்தி விழா மற்றும் குருபூஜை விழா இன்று (புதன்கிழமை) நடக்கிறது. இதில் பங்கேற்று அவருக்கு மரியாதை செலுத்துவதற்காக தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று இரவு சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை வந்தார். அவருக்கு திமுக தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர் அவர் அழகர்கோவில் சாலையில் உள்ள அரசு சுற்றுலா மாளிகையில் தங்கினார்.

இதையடுத்து இன்று காலை 7 மணி அளவில் கோரிப்பாளையத்தில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் தெப்பக்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள மருது சகோதரர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதன்பின்னர் அங்கிருந்து ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் சென்ற முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் முத்துராமலிங்கத்தேவர் ஜெயந்தி விழாவில் அரசின் சார்பில் கலந்து கொண்டு அவரது நினைவாலயத்தில் மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து அமைச்சர்கள் ஐ. பெரியசாமி, தங்கம் தென்னரசு,பி. மூர்த்தி, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், ராஜ கண்ணப்பன், டி.ஆர்.பி.ராஜா, மகேஷ் அன்பில் பொய்யாமொழி, கீதா ஜீவன் ஆகியோர் மரியாதை செலுத்தினர். முதல் அமைச்சர் வருகையையொட்டி பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.






தீபாவளி பண்டிகையையொட்டி நாளை 31ம்தேதி (வியாழக்கிழமை) மற்றும் 1ம்தேதி (வெள்ளிக்கிழமை) நமது மாலை எக்ஸ்பிரஸ் நாளிதழ் வெளிவராது. வழக்கம் போல், 2ம்தேதி (சனிக்கிழமை) வெளிவரும். பொதுமக்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மாலை எக்ஸ்பிரஸ் நாளிதழ் மற்றும் சுப்ரீம் டி.வி. சார்பில் தீப ஒளி நல்வாழ்த்துக்கள்.

-ஆசிரியர்


# வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து

வில்லியனூர், புதுவை மாநிலம்.

## மக்கள் சேவையில் மகத்தான பணிகள்

- புதுச்சேரி மாநிலம் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து 65.96 ச.கி.மீ. பரப்பளவு கொண்டு 24 கிராம பஞ்சாயத்துகளை உள்ளடக்கிய அதிக மக்கள் தொகையினை கொண்ட ஒரு பெரிய கொம்யூன் பஞ்சாயத்து ஆகும்.
- மத்திய அரசின் 'ஜல் சக்தி' திட்டத்துடன், புதுவை அரசின் "நீரும்... ஊரும்.... திட்டமும்" இணைந்து வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து பகுதிகளில் இது வரை 71 குளங்கள் கண்டறியப்பட்டு, அதில் 58 குளங்கள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் மழை நீர் சேகரிக்கப்பட்டு நிலத்தடி நீர் மட்டம் உயர வழி வகை செய்யப்பட்டுள்ளது.
- இல்லங்கள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் மருத்துவமனைகளில் உருவாகும் குப்பைகளை, ஆரம்ப நிலையங்களிலேயே, மக்கும் குப்பை, மக்காத குப்பை மற்றும் அபாயகரமான குப்பை என தரம் பிரித்து வழங்கும் வகையில், பொதுமக்கள், மாணவர்கள், நிறுவன ஊழியர்கள் மற்றும் மகளிர் சுயஉதவி குழுக்கள் மத்தியில் பிரச்சாரங்கள், பேரணிகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் ஊக்குவிப்பு போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.
- பொதுமக்கள் தங்கள் கொம்யூன் சார்ந்த குறைகள் மற்றும் ஆலோசனைகளை தெரியப்படுத்தவும், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து பணிகளை அறிந்து கொள்ளும் விதமாகவும், புதுச்சேரி உள்ளாட்சி துறை http://lad py.gov.in என்ற பிரத்தியேக இணைய தளத்தை செயல்படுத்தி உள்ளது.
- வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.
- வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்தின் பிறப்பு, இறப்பு பதிவு பிரிவு கணினிமயமாக்கப்பட்டு உடனுக்குடன் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது மற்றும் பொது சேவை மையம் மூலமாகவும் பிறப்பு, இறப்பு சான்றிதழ் பெற்றுக்கொள்ளலாம்.
- வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்தில் பொதுமக்கள் சொத்து வரி செலுத்தும் முறையினை எளிமைப்படுத்தி ஆன்லைன் மூலம் பணம் செலுத்தும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- நாள்தோறும் கொம்யூன் முழுவதும் ஸ்வச்சத்தா கார்பரேஷன் ஊழியர்கள் மற்றும் HR Square ஊழியர்கள் இணைந்து 27.29 டன் குப்பைகளை அகற்றி வருகின்றனர்.
- 52 கிராமங்களிலும் 1.25 லட்சம் மக்களுக்கு தூய்மையான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் HR அட்டை விநியோகிக்கப்பட்டு வருகிறது.
- வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்துக்குட்பட்ட அனைத்து பகுதியில் உள்ள தெருக்களின் குழல் மின் விளக்குகளை LED மின் விளக்குகளாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சுத்தமே சுகாதாரம் - தூய்மையே சேவை - பொது சுகாதாரத்தினை கடைபிடிக்க உறுதியாக உள்ளோம்.

குடிநீர் சிக்கனம் - தேவை இக்கணம் "குப்பையை வீதியில் கொட்டாதே" பிறப்பு, இறப்பு பதிவு செய்தல் அவசியம்.

### மங்கலம் தொகுதி மேம்பாட்டு வேலைகள்:-

**சட்டமன்ற உறுப்பினர் நிதி 2022-23:-**

- வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து மங்கலம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் அனந்தபுரம் அரியூர், சாத்தமங்கலம், சிவராந்தகம், கீழ்அக்ரகாரம், கீழுர் அகிய பகுதிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்ய (RO Plant) அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வடமங்கலம் மாரியம்மன் கோவில் வீதிக்கு சிமெண்ட் சாலை வசதி உறுவையாறு வெங்கடா நகர், மூகாம்பிகை நகர், ஜெயம் நகர், கிருஷ்ணா நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை வசதி செய்ய 2022-23 சட்டமன்ற நிதியின் மூலம் ரூ.2.00 கோடி செலவிடப்படுகிறது.

**சட்டமன்ற உறுப்பினர் நிதி 2023-24:-**

- மேலும் உறுவையாறு அன்பு நகருக்கு சிமெண்ட் சாலை வசதி செய்தல் மற்றும் அண்ணாமலை நகர், ரமணா நகர், அன்பு நகர் மெயின் ரோடு பகுதிகளுக்கு தார் சாலை செய்ய 2023-24 ஆண்டின் சட்டமன்ற நிதியின் மூலம் ரூ.77.00 லட்சம் செலவிடப்பட உள்ளது.
- வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து சொந்த நிதியில் மேல்சாத்தமங்கலம், தனலட்சுமி நகர், தேனிநகர் மற்றும் ஏரிக்கரை ரோடு, கீழ்சாத்தமங்கலம், பழனி நகர், முருகன் கோவில், அண்ணாமலை நகர், உறுவையாறு ஜீவா நகர், பெருங்களூர் கல்கி நகர், அரியூர் உஷா வீதிகளுக்கு சிமெண்ட் சாலை வசதி செய்து தரப்பட்டது. மங்கலம் வள்ளலார் பள்ளி வீதி, பழைய காலனி வீதி, பங்கூர் வரதராஜ பெருமாள் கோவில் வீதி ஆகியவற்றிற்கு சிமெண்ட் சாலை வசதி செய்யப்படுகிறது.
- பங்கூர் புதுநகர், அனந்தபுரம் அங்காளம்மன் கோவில் பின்புறம் அனந்தபுரத்தில் விடுபட்ட சாலைகளுக்கு கீழூர் முத்துமாரியம்மன் கோவில் வீதி மந்தவெளிரோடு வீதிகளுக்கு தார் சாலை வசதி செய்து தரப்பட்டது. உறுவையாறு ராமச்சந்திரா நகர், சௌந்தர்யா நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை வசதி செய்து தரப்பட்டது.
- ஆரிய பாளையம் மாருதி தாசன் நகர், சுதானா நகர், அருண் நகர், இந்திரா நகர் ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை வசதி செய்யப்படுகிறது. பங்கூர் சுடுகாட்டிற்கு சுற்று மதில் கட்டப்பட்டது. மேற்கண்ட பணிகளுக்கு வில்லினயூர் கொம்யூன் பஞ்சாயத்து சொந்த நிதியில் இருந்து ரூ.5.66 கோடி செலவிடப்பட்டது.

### வில்லியனூர் தொகுதி மேம்பாட்டு வேலைகள்:-

**சட்டமன்ற உறுப்பினர் நிதி 2022-23:-**

- வில்லியனூர் வசந்தா நகர் உட்புற வீதிகளுக்கு சிமெண்ட் சாலை வசதி செய்தல், ஆரணி வீதி மற்றும் தில்லை நகர் பகுதிகளுக்கு குறுகிய பாலம் கட்டி கழிவு நீர் வாய்க்கால் வசதி செய்தல். ஓம் சக்தி நகர், பாண்டியன் நகர், பூம்புகார் நகர், காந்தி நகர் ஆகிய பகுதிகளுக்கு சாலை வசதி செய்தல். மற்றும் வேதபுரீஸ்வரர் நகர் தார் சாலை வசதி செய்தல் ஆகிய பணிகளுக்கு ரூ.1.50 கோடிக்கு பணிகள் நிறைவு பெறும் தருவாயில் உள்ளது.

**சட்டமன்ற உறுப்பினர் நிதி 2023-24:-**

- வில்லியனூர் பெருமாள்புரம் உட்புற வீதிகளுக்கு சிமெண்ட் சாலை வசதியுடன் கூடிய கழிவு நீர் வாய்க்கால் வசதி செய்தல், அன்னை நகர் (கரையான் பேட்) கழிவு நீர் வாய்க்காலுடன் கூடிய தார் சாலை வசதி செய்தல், மற்றும் வில்லியனூர் திருக்காமீஸ்வரர் விரிவாக்கத்திற்கு சாலை வசதி செய்தல் ஆகிய பணிகளுக்கு 77 லட்சத்திற்கு டெண்டர் விடப்பட்டுள்ளது.
- வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து சொந்த நிதி வில்லியனூர் பழனிசாமி நகர், கிருஷ்ணா நகர், யாதவர் மடம், ஜி.என்.பாளையம் உட்புற வீதி, முத்துப்பிள்ளை பாளையம் புது நகர் ஆகிய பகுதிகளுக்கு சிமெண்ட் சாலை வசதி செய்தல் மற்றும் மனவெளி பாலாஜி நகர் பகுதிகளுக்கு தார் சாலை வசதி செய்ய ரூ.1.45 கோடிக்கு டெண்டர் விடப்பட்டுள்ளது.
- வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்திற்கு சொந்தமான அன்னை கஸ்தூரிபாய் திருமண நிலையம் இடிக்கப்பட்டு புதிய திருமண நிலையம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்திற்கு சொந்தமான வணிக வளாகம் கட்டும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### ஊசுடு தொகுதி மேம்பாட்டு வேலைகள்:-

**சட்டமன்ற உறுப்பினர் நிதி 2022-23:-**

- உளவாய்க்கால் பாலாஜி நகர், அரசூர் அன்பு நகர், கோனேரிகுப்பம், பத்மாவதி நகர் தொண்டமானத்தம் மங்கலட்சுமி நகர், கோபாலன்கடை சுடுகாட்டு பாதை, குருமாம்பேட் வீட்டு வாரியம் தெருக்களுக்கு மற்றும் அரசூர், விநாயகர் கோவில் வீதி ஆகிய பகுதிகளுக்கு ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் சாலை வசதி செய்து முடிக்கப்பட்டுள்ளது.
- சேதாரப்பட்டு சரஸ்வதி நகருக்கு L வடிவ வாய்க்கால் கரசூர் அங்கன்வாடி கட்டிடம், அகரம் உட்புற வீதிகளில் சிமெண்ட் சாலை மறுசீரமைத்தல் போன்ற வேலைகளுக்கு ரூ.50.00 லட்சத்துக்கு பணிகள் நடைபெற்று வருகிறது.

**வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து சொந்த நிதி**

- வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து சொந்த நிதியில் தொண்டமாநத்தம் பாரதி நகர், ராமநாதபுரம், காமராஜர் நகர், பொறையூர் கற்பக விநாயகர் நகர், குரும்பா பேட் சப்தகிரி அவென்யூ, பிள்ளையார்குப்பம் அய்யனார் கோவில், சேதாரப்பட்டு பூக்காரதெரு, அரசூர் குமரன் நகர் மற்றும் முத்து குமரன் நகர் மற்றும் பொறையூர் சக்தி கார்டன், பொறையூர் சண்முகா வி.ஐ.பி. சிட்டி, கூடப்பாக்கம் பொறையாத்தாள் அம்மன் நகர் மற்றும் சக்தி நகர் போன்ற பகுதிகளுக்கு தார் சாலை வசதி ரூ.107 கோடிக்கு நடைபெற்று முடிந்து விட்டது.
- வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து சொந்த நிதியில் ஊசுடு தொகுதியிற்குட்பட்ட உளவாய்க்கால் சௌந்தரியா நகர், வெற்றி வேலன் நகர், சிவசக்தி நகர், கரசூர் சுப்ரிம் நகர், கூடப்பாக்கம் முத்துகுமரன் நகர் ஆகிய பகுதிகளில் தார் சாலை வசதி ரூ.91.65 லட்சத்துக்கு நடைபெற உள்ளது.
- வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்திற்குட்பட்ட ஊசுடு தொகுதியில் உள்ள ஊசுடு ரோட்டில் இருந்து பத்துகண்ணு சந்திப்பு வரை ரூ.21.64 லட்சத்துக்கு கொம்யூன் பஞ்சாயத்து சொந்த நிதியின் மூலம் மின்சார தெருவிளக்கு அமைக்கப்பட்டுள்ளது.
- வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்திற்குட்பட்ட ஊசுடு தொகுதியில் உள்ள பத்துகண்ணு சந்திப்பு முதல் கூனிமுடக்கு வரை ரூ.24.81 லட்சத்துக்கு கொம்யூன் பஞ்சாயத்து சொந்த நிதியின் மூலம் மின்சார தெருவிளக்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**C.ரமேஷ்,** ஆணையர்
வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து, வில்லியனூர்

No.2924/DIP/AD(PRESS)/PRA/2024-25 Dated: 07.10.2024

# சூவென்ஸ்டாட் பள்ளியில் விளையாட்டு விழா



நெல்லை, அக். 30-

திருநெல்வேலி மாவட்டம் பிரான்சேரியில் உள்ள சூவென்ஸ்டாட் பள்ளியின் பத்தாவது ஆண்டு விளையாட்டு விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிகழ்விற்கு சிறப்பு அழைப்பாளராக சமூக ஆர்வலர் மற்றும் மக்கள் உரிமைகள் பாதுகாப்பு இயக்கத்தின் முதன்மை செயலாளர் நெய்னா முகமது கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இவ்விழாவிற்கு ஸ்காட் இன்டர்நேஷனல் பள்ளியின் பொருளாளர் பிரவீன், ஜெர்மனியில் இருந்து வந்து இருந்த தன்னார்வலர் விக்டோரியா, பள்ளியின் தாளாளர் ஜோ, பள்ளியின் முதல்வர் ஜெயக்குமார், பொருளாளர் ரீகன், பெற்றோர் ஆசிரியர் கழக செயலாளர் லீலா கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள் கலந்துகொண் டார்கள். போட்டியில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ் கொடுத்து பாராட்டினார்கள்.

# மக்கள் சந்திப்பு திட்ட முகாம்



சேலம், அக். 30-

சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தலைமையில் சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி, வீரபாண்டி மற்றும் சேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் மக்கள் சந்திப்பு திட்ட முகாம்கள் நடைபெற்றது. இம்முகாம்களில் சுற்றுலாத்துறை அமைச்சர் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டு பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் பிற மாநிலங்கள் பாராட்டும் வகையில் சிறப்பான ஆட்சியை வழங்கி வருகிறார்கள். அந்த வகையில், பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, மகளிருக்கான விடியல் பயணத்திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் போன்ற எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

சேலம் மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் சுமார் 84,151 பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர். அதேபோன்று, கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் கீழ் 5.50 இலட்சம் மகளிர் பயன்பெற்று வருகின்றனர். இதில், சேலம் வட்டத்தில் மட்டும் 75,103 மகளிர் பயன்பெற்று வருகின்றனர். மேலும், சேலம் வட்டத்தில் 33,311 பேர் முதியோர் உதவித்தொகை பெற்று வருகின்றனர்.

அதேபோன்று, வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் கடந்த ஓராண்டில் சுமார் ரூ.60 கோடி மதிப்பிலான வளர்ச்சித்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 104 வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. திருமணிமுத்தாற்றில் ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் ரூ.10 கோடி மதிப்பிலான பல்வேறு பணிகள், வீடுகள் பழுதுபார்க்கும் திட்டம், பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் போன்ற எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 19 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், புதுமைப்பெண் திட்டம் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்களின் மூலம் மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் வகையில் மூன்று ஆண்டுகளுக்கு ரூ.36,000 எனவும், ஐந்து ஆண்டுகள் படித்தால் ரூ.60,000 என்ற வகையிலும் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது. மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் 23,927 மாணவிகளும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் 13,685 மாணவர்களும், நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 82,837 மாணவ, மாணவிகளுக்கு திறன் பயிற் சி களும் வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின் றனர். மேலும் கடைக்கோடி கிராமத்துக்கும் மருத்துவ சேவையைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கில் மக்களைத் தேடி மருத்துவம் என்ற மகத்தான திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ 2 கோடி பேர் பயனடைந்து வருகின்றனர். அதேபோன்று, கூட்டுறவுத்துறையின் மூலம் ரூ.2,965 கோடி பயிர் கடனுதவிகளும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஏறத்தாழ ரூ.4,000 கோடி மதிப்பிலான பல்வேறு கடனுதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. கூட்டுறவு வங்கிகளில் 5 பவுனுக்குட்பட்ட நகைக்கடன் இரத்துத் திட்டத்தின் கீழ் பய னாளிகளுக்கு ரூ. 450 கோடி மதிப்பிலான நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது அதிக முக்கியத்துவம் அளித்து விரைந்து கோரிக்கைகளை நிறைவேற்றிட அறிவுறுத்தியுள்ளார்கள். அந்தவகையில், பொதுமக்களிடம் இருந்து நேரடியாக மனுக்களைப் பெற்று குறைகளுக்கு தீர்வுகாண ஏதுவாக இன்றைய தினம் சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி, வீரபாண்டி மற்றும் சேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் நடைபெற்ற முகாம்களில் பெறப்பட்ட மனுக்கள் மீது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும், தொடர்புடைய அரசுத்துறை அலுவலர்களும் விரைந்து தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக, சங்ககிரி, எடப்பாடி, ஏற்காடு உள்ளிட்ட இதுவரை நடைபெற்ற 15 மக்கள் சந்திப்பு திட்ட முகாம்கள் மூலம் சுமார் 6,000க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டு தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இன்றையதினம் நடைபெற்ற முகாம்களில் வருவாய்த்துறை, வேளாண்மை உழவர் நலத்துறை, தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மின்சாரத்துறை, கூட்டுறவுத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் வருகைதந்து பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.


குறிப்பாக, தனிப்பட்டா, கூட்டுப்பட்டா, சாதிச்சான்று, இருப்பிடச் சான்று, வருமானச் சான்று, வாரிசுச்சான்று, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, விதவை உதவித்தொகை, பட்டாவில் பெயர் மாற்றம், குடும்ப அட்டை, கல்விக்கடன், மின் இணைப்பு பெயர் மாற்றம், சொத்து வரி பெயர் மாற்றம், சிறு, குறு விவசாயி சான்று போன்ற பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்படவுள்ளன.

மனுக்களைக் கொண்டுவந்துள்ள பொதுமக்கள் அனைவரும் கட்டாயம் தங்களது மனுக்களை கணிணியில் பதிவு செய்து அதன் ஒப்புகைச் சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். ஒப்புகைச் சீட்டை பெறுவதால் மனுக்களின்மீது மேற்கொள்ளப்பட்டுவரும் நிலை குறித்து எளிதாக அறிந்துகொள்ள முடியும். மேலும் அனைவரும் கட்டாயம் தங்களது கைப்பேசி எண்ணை எழுதுத்தர வேண்டும். அவ்வாறு குறிப்பிடும்போது ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் உங்களிடத்திலே அலுவலர்கள் தொடர்பு கொள்வதற்கு வாய்ப்பாக அமையும். இவ்வாறு பேசினார்கள்.

இன்றையதினம் பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற முகாமில் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.1.79 கோடி மதிப்பிலான கடனுதவிகளும், வருவாய்த்துறை, வேளாண்மை உழவர் நலத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மின்சாரத்துறை, கூட்டுறவுத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, ஆதிதிராவிடர்நலத்துறை உள்ளிட்ட துறைகளின் மூலம் 110 பயனாளிகளுக்கு ரூ.2.45 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற முகாமில் 52 பயனாளிகளுக்கு ரூ.37.89 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

இம்முகாம்களில், மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வகணபதி, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் அருள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) லலித் ஆதித்யநீலம், மாவட்ட வருவாய் அலுவலர் மேனகா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சிவலிங்கம், சேலம் வருவாய் கோட்டாட்சியர் அபிநயா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) மயில், திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) வாணி ஈஸ்வரி, துணை ஆட்சியர் (பயிற்சி) மாருதிபிரியா, சேலம் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் மலர்கொடி ராஜா, மல்லூர் பேரூராட்சித்தலைவர் லதா அய்யனார், பனமரத்துப்பட்டி பேரூராட்சித்தலைவர் பரமேஸ்வரி, பாரப்பட்டி சுரேஷ், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் டாக்டர் மலர்விழி ராஜா, வீரபாண்டி அட்மா குழுத்தலைவர் வெண்ணிலா சேகர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் கலந்துகொண்டனர்.

# முத்துராமலிங்க தேவர் சிலைக்கு மாலை



நெல்லை மாவட்டம் கருங்குளத்தில் முத்துராமலிங்க தேவரின் 117வது ஆண்டு 62 ஆவது குருபூஜை தினத்தை முன்னிட்டு யமஹா முருகன் தலைமையில் சிலைக்கு மாலை சாத்தி மரியாதை செலுத்தப்பட்டது.



நெல்லை மாவட்டம் மேலப்பாளையம் குறிச்சியில் முத்துராமலிங்க தேவரின் 117வது ஆண்டு 62வது குருபூஜை தினத்தை முன்னிட்டு கடந்த 22 வருடமாக முத்துராமலிங்க தேவர் சிலையும், மருது சகோதரர்கள் சிலைக்கும் தேவர் குருபூஜை தினத்தை முன்னிட்டு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் இளைஞரணி சார்பில் தலைமையில் மாலை சாத்தி மரியாதை செலுத்தப்பட்டது.

## தலையங்கம்

## மாலை எக்ஸ்பிரஸ்

30.10.2024 (புதன்கிழமை)

# பாராட்டுக்குரியது

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, சிவாஜிகணேசன், விஜயகாந்த் என்று பலரும் சினிமா உலகில் இருந்து அரசியலுக்கு வந்தவர்கள்தான். அந்த வரிசையில் இப்போது நடிகர் விஜய்யும் அரசியல் களம் கண்டிருக்கிறார்.

பல ஆண்டுகளுக்கு முன்பே விஜய் பொது வாழ்க்கைக்கு வந்துவிட்டார். ‘ஸ்டெர்லைட்’ போராட்டத்தின்போது தூத்துக்குடியில் நடந்த துப்பாக்கி சூட்டில் இறந்தவர்கள் வீடுகளுக்கு உடனடியாக சென்று ஆறுதல் கூறியதுடன் நிதியுதவியும் அளித்தார். அதுமட்டுமல்லாமல், ஆண்டுதோறும் பிளஸ்2 மற்றும் 10ம் வகுப்பில் சட்டமன்ற தொகுதி வாரியாக அதிக மதிப்பெண் எடுக்கும் மாணவர்களுக்கு பரிசுத்தொகை வழங்கி வருகிறார். இதுவரை 200 ஜோடிகளுக்கு இலவச திருமணத்தை நடத்தி, சீர்வரிசை பொருட்களையும் வழங்கியுள்ளார்.

இந்த நிலையில், கடந்த பிப்ரவரி மாதம் தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் அரசியல் கட்சியை தொடங்கப்போவதாக அறிவித்து அரசியல் உலகில் விஜய் பரபரப்பை ஏற்படுத்தினார். கடந்த ஆகஸ்டு மாதம் 22ந்தேதி கட்சி கொடியை அறிமுகம் செய்து, “மக்கள் சேவகராக பணியாற்றுவேன்” என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டார். கடந்த ஞாயிற்றுக்கிழமை விக்கிரவாண்டியை அடுத்த வி. சாலையில் தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் மாநில மாநாடு நடந்தது. இந்த மாநாடு மாலை 4 மணிக்கு தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், காலை 6 மணிக்கே அவரது ரசிகர்களும், தொண்டர்களும் குவியத் தொடங்கினார்கள். சுடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் கடும் கூட்டம் கூடியதால், முன்னதாகவே மாலை 3 மணிக்கு மாநாடு தொடங்கியது.

வழக்கமான அரசியல் கட்சி மாநாடுபோல் அல்லாமல், வித்தியாசமாக நடத்தப்பட்டது. புஸ்சி ஆனந்த் வரவேற்று பேசியதும் கட்சியின் கொள்கைகள் அறிவிக்கப்பட்டது. அதன் பிறகு விஜய் பேசினார். அவரது பேச்சில் கனிவும் தெரிந்தது, காரசாரமும் இருந்தது. மேடையில் தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், அண்ணல் அம்பேத்கர், ராணி வேலு நாச்சியார், மக்கள் சேவகர் கடலூர் அஞ்சலை அம்மாள் ஆகியோரது படங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவர்கள்தான் கட்சியின் கொள்கை வழிகாட்டி தலைவர்கள் என்று விஜய் அறிவித்தது புதுமையாக இருந்தது. ‘இதுவரை எந்த அரசியல் கட்சியும் பெண்களை கொள்கை தலைவராக அறிவித்தது இல்லை’ என்று பெருமையாக பிரகடனப்படுத்தப்பட்டது.

நேரடியாக குறிப்பிடாவிட்டாலும், அரசியல் எதிரிகளாக பா.ஜனதாவையும், தி.மு.க.வையும் மறைமுகமாக அவர் அறிவித்தார். தி.மு.க.வைப்பற்றி சொல்லும்போது, ‘மக்கள் விரோத ஆட்சியே திராவிட மாடல் ஆட்சி’ என்று குற்றம்சாட்டினார். 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில், தமிழக வெற்றிக் கழகம் தனிப்பெரும்பான்மையோடு வெற்றி பெற்றாலும் கூட்டணி கட்சிகளுக்கும் ஆட்சி அதிகாரத்தில் பங்களிப்பு வழங்கப்படும் என்ற அறிவிப்பு, பிற கட்சிகளை சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்பதை வெளிப்படையாக காட்டியது. கட்சியின் கொள்கைகளும், செயல் திட்டங்களும் விளக்கமாக வெளியிடப்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் கூடியபோதும் மாநாடு மிக அமைதியாக கட்டுப்பாடுடன் நடந்து முடிந்தது பாராட்டுக்குரியது.

# ஊழல் தடுப்பு விழிப்புணர்வு பேரணி



விழுப்புரம், அக். 30-

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு ஊழல், லஞ்சத்துக்க எதிராக பொதுமக்களுக்கான விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் பழனி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இதில் அரசு பள்ளி மாணவிகள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பேரணியாக சென்றனர். உடன் லஞ்ச ஒழிப்பு காவல் துணை கண்காணிப்பாளர் அழகேசன், காவல் ஆய்வாளர் ஈஸ்வரி, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் யோகா ஜோதி, காவல் உதவி ஆய்வாளர் சக்கரபாணி, தலைமை காவலர் மூர்த்தி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# பச்சிளம் குழந்தைக்கு ரத்தம் அளித்து உயிரைக் காப்பாற்றிய சம்பத் எம்.எல்.ஏ.,



புதுச்சேரி, அக். 30

புதுவையில் நாவற்குளம் பகுதியில் வசிக்கும் மணிகண்டன் இலக்கியா தம்பதியர்க்கு கடந்த மூன்று நாட்களுக்கு முன் தனியார் மருத்துவமனையில் பெண் குழந்தை பிறந்தது. பிறந்த மூன்று நாட்களுக்கு பிறகு மஞ்சள் காமாலை நோயால் கடுமையாக குழந்தை பாதிக்கப்பட்டது. குழந்தைக்கு உடனடியாக 400 எம்.எல்., அரிய வகையான ‘ஓ நெகட்டிவ்’ ரத்தம் தேவைப்பட்டது. குழந்தையின் பெற்றோர், குடும்பத்தினர்கள், நண்பர்கள் என அனைவரும் அனைத்து வகையிலும் முயற்சி செய்தும், அனைத்து ரத்த வங்கிகளையும் அணுகியும் அவர்களின் அரிய வகை ரத்த தேவை பூர்த்தியாகவில்லை. இந்நிலையில் கடைசி முயற்சியாக திமுக இளைஞரணி சார்பில் செயல்பட்டு வரும், ‘உதயாவின் குருதி’ ரத்தக் கொடையாளர்களின் அமைப்பை தொடர்பு கொண்டனர்.

இதுகுறித்து திமுக மாநில இளைஞர் அணி அமைப்பாளர் சம்பத் எம்.எல்.ஏ., கூறியதாவது எனது ரத்தமும் ‘ஓ நெகட்டிவ்’ (O-ve) என்பதால் நானே மருத்துவமனைக்கு நேரில் சென்று தேவையான ரத்தம் அளித்தேன். தக்க சமயத்தில் குழந்தைக்கு ரத்தம் கிடைத்ததால், தற்போது குழந்தை நலமாக இருப்பதாகவும் சில தினங்களில் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் மருத்துவமனை டாக்டர்கள் தற்போது என்னை தொடர்பு கொண்டு தெரிவித்தனர்.தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளில் தொடங்கப்பட்ட உதயாவின் குருதி பலருக்கு உதவிக்கரம் நீட்டி உள்ளது. இருப்பினும் பச்சிளம் குழந்தை உதயாவின் குருதி என்ற தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளில் தொடங்கிய ரத்த வங்கி மூலம் உயிர்பிழைத்தது மிகவும் மகிழ்ச்சியாகவும், நெகிழ்ச்சியாகவும் இருந்தது. இம் மாபெரும் உயிர் காக்கும் நிகழ்விற்கும், உதயாவின் குருதி தொடங்க காரணமான தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# சங்கரன்கோவிலில் லயன்ஸ் பாராட்டு விழா




**சங்கரன்கோவிலில், அக். 30-**

லயன்ஸ் கிளப் பாராட்டு விழா சிறப்பு கூட்டம் நடைபெற்றது. கூட் டத்தில் பாராட்டு விழா நடைபெற்றது. இதில் செங்குந்தர் அபிவிருத்தி சங்க தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள சாரதி ராம் அறக் கட்டளை தலைவர் பிஜிபி ராமநாதன், முன்னாள் எம்எல்ஏ அகில இந்திய எம்ஜிஆர் மன்ற துணைத் தலைவர் சுப்பையா பாண்டியன், நகர வர்த்தகர் சங்க பொருளாளராக எஸ் ஆர்எல் வேணுகோபால் என்ற கண்ணன் ஆகியோருக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

பாராட்டு விழாவில் விருந்தினர் களுக்கு பொன்னாடை அணிவிக்கப் பட்டு பாராட்டு தெரிவிக்கப்பட்டு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது. விழாவில் 324, ஏ, மாவட்ட ஆளுநர் லயன் டாக்டர் பி. அய்யாதுரை லயன் ஏ முருகன் மாவட்ட செயலாளர் மற்றும் லயன்ஸ் கிளப் மாவட்ட நகர பொறுப்பாளர்கள் லயன் எம் ராமசாமி, லயன் அரி ராமச்சந்திரன, லயன் சேது ராஜ், லயன் வி பழனிவேல், முருகராஜ் உள்பட லயன்ஸ் கிளப் உறுப்பினர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு பாராட்டு விழா நிகழ்ச்சியை சிறப்பித்தனர். ஏற்பாடுகளை லயன்ஸ் கிளப் பொறுப் பாளர்கள் உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# வேளாண்மை கூட்டுறவு வங்கி திறப்பு



**உளுந்தூர்பேட்டை, அக். 30-**

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி நகர் ஊராட்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி பொதுப்பணி நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் கள்ளக்குறிச்சி மாவட்டத் தின் பொறுப்பு அமைச்சர் எவ.வேலு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். உடன் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம், ஆட்சி மன்ற குழு உறுப்பினர் மாவட்ட கழக அவைத் தலைவர் ஏஜே மணிகண்ணன் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் உதயசூரியன் எம்எல்ஏ, வசந்தம் கார்த் திக் எம்எல்ஏ மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் உளுந் தூர்பேட்டை ஒன்றிய செயலாளர் ராஜவேல் வைத்தியநாதன், வசந்த வேல், கேவி முருகன், சாந்தி இளங்கோ வன், மாவட்ட கவுன்சிலர் பெரிய பாண்டியன், உளுந்தூர் பேட்டை நகர மன்ற உறுப்பினர் செல்வகுமாரி, ரமேஷ்பாபு, கலா, சுந்தரமூர்த்தி, வேல்முருகன், மனோபாலா மற்றும் நகர, ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வு வினாடி-வினா போட்டி



**காரைக்கால், அக். 30-**

காரைக்கால் மாவட்ட கல்லூரி மாணவர்களுக் கிடையான, சைபர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த வினாடி வினா போட்டி நேற்று சிறப்பாக நடைபெற்றது.

தேசிய சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு, காரைக்கால் மாவட்ட கலெக்டர் மணிகண்டன் அறிவுறுத்தலின்பேரில், காரைக்கால் மாவட்ட சைபர் பாதுகாப்பு அலுவலகம் மற்றும் மாவட்ட நாட்டு நலப்பணி திட்ட இணைந்து, காரைக்காலில் உள்ள கல்லூரி மாணவர்களுக்கு இடையேயான சைபர் பாதுகாப்பு குறித்து வினாடி வினா போட்டி நேற்று நடத்தப்பட்டது. காரைக்கால் பெருந்தலைவர் காமராஜர் அரசு கல்வியியல் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டி, சைபர் பாதுகாப்பு தகவல் அதிகாரி மனோகர், விக்ரம் ஷெர்ஹாவத் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. வினாடி வினா போட்டியில் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரிகளில் உள்ள மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில், மாவட்ட கலெக்டர் அலுவலக கண்காணிப்பாளர் வித்யாதரன், மாவட்ட நாட்டு நல பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தாமோதரன், காமராஜர் கல்வியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் கனகவேல், கல்லூரியின் மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் அனைவரும் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# காரைக்கால் நிரவி சாலையின் இரண்டு இடங்களிலும் நிழல் குடை அமைக்க வேண்டும்

## தொகுதி எம்.எல்.ஏவிடம் மனிதநேய மக்கள் கட்சி கோரிக்கை

**காரைக்கால், அக். 30-**

காரைக்காலை அடுத்த நிரவி சாலையின் இரண்டு இடங்களிலும், பொதுமக்கள் நலன் கருதி, நிழல் குடை அமைக்க வேண்டும். என, தொகுதி எம்.எல்.ஏ நாகதியாக ராஜனிடம் மனிதநேய மக்கள் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.



காரைக்கால் மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் முஹம்மது ஆஷிக், நிரவி திருபட்டினம் தொகுதி தலைவர் அப்துல் ரஹ்மான், தொகுதி செயலாளர் தாரிக், பொருளாளர் அப்துல் ரஹ்மான், தமுமுக பொறுப்பாளர் சாதிக் ஆகியோர், நிரவி –திரு.பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜனை நேரில் சந்தித்து, ஓர் கோரிக்கை மனு வழங்கினர். அந்த மனுவில், 'நிரவி முதல் மற்றும் இரண்டாவது சாலைகளில் உள்ள பஸ் நிறுத்தங்களில், மழை மற்றும் வெயில் காலங்களில் பொதுமக்களுக்கு பாதுகாப்பான நிழல்குடை இல்லாமல் மிகவும் அவதியுர்று வருவதால், பொதுமக்கள் நலன் கருதி, நிழல் குடை அமைக்க வேண்டும். இவ்வாறு அதில் வலியுறுத்தியுள்ளனர்.

# விவசாயிகளுக்கான குறைகேட்பு கூட்டம்

**கடலூர், அக். 30-**



கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகளுக்கான குறைகேட்பு மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், மழைக்காலம் என்பதால் மழைநீர் தேங்காமல் எளிதில் வடிவதற்கும், தேவையான அளவு உரங்களை விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டியும், அரசு மானியங்களை தகுதியுள்ள அனைவருக்கும் வழங்கிடவேண்டு என்பது குறித்து விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். மேலும், விளைப்பொருட்களுக்கான ஏற்றுமதி கருத்தரங்கம் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது என தெரிவித்தனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகளின் நலன்கருதி பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அரசால் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை விவசாயிகளுக்கு கிடைத்திட விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடலூர் மாவட்டத்தில் தற்போது யூரியா 5,918 மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி 2,578 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 1,541 மெட்ரிக் டன்னும், காம்ப்லக்ஸ் உரம் 5,063 மெட்ரிக் டன்னும், சூப்பர் பாஸ்பேட் 1,054 மெட்ரிக் டன்னும் என மொத்தம் 16,154 மெட்ரிக் டன் இருப்பு உள்ளது.

கடலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு மழைப்பொழிவின் அளவு 1155.61 மில்லி மீட்டர் ஆகும். 2024 ஆம் ஆண்டு மழைப்பொழிவின் அளவு சாதாரணமாக 1206.7 மில்லி மீட்டர் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் 797.58 மில்லி மீட்டர் அளவு மழை பெய்துள்ளது.

இயற்கை இடர்பாடுகளால் பாதிப்படைந்த பயிர்களுக்கு வழங்கப்படும் பயிர் காப்பீட்டு தொகையினை விரைந்து வழங்கிட வேண்டும். அரசு மானியங்களை தகுதியுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் கிடைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு உரிய தொகையினை விரைந்து வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், வடகிழக்குப் பருவமழை நிலவுவதால் விவசாயிகள் வாய்க்கால் தூர்வாருதல் மற்றும் தடுப்பணை அமைப்பது தொடர்பாக தெரிவித்த கோரிக்கைககள் விரைந்து நிறைவேற்றிடவும். மேலும், மழைக்காலங்களில் பயிர் விளைச்சலின்போது ஏற்படும் மின் துண்டிப்பு, மின் அழுத்தம் போன்ற இடர்பாடுகளை சரிசெய்து தடையில்லா மின்சாரம் வழங்கவும், விவசாயிகள் தங்கள் உற்பத்தி செய்த விளைப்பொருட்களை கொள்முதல் நிலையங்களுக்கு பாதுகாப்பாக கொண்டு செல்வதற்கு ஏதுவாக சாலைகளை செப்பனிடவும் வேண்டும்.

விவசாயிகளுக்கு வருவாய்த்துறை மூலம் வழங்கப்படும் பட்டா, சிட்டா, அடங்கல், கிசான் கிரெடிட் கார்டு உள்ளிட்ட சான்றிதழ்களை உரிய காலக்கெடுவிற்குள் வழங்கிடவும், விவசாயிகள் இக்கூட்டத்தில் தெரிவித்த கோரிக்கைகளை சாத்தியக்கூறின் அடிப்படையில் ஆய்வு மேற்கொண்டு தீர்வுகாண வேண்டும். விவசாயிகளுக்கு விதை நெல் மற்றும் உரம் தட்டுப்பாடின்றி கிடைத்திடவும், விவசாயிகளின் கோரிக்கைகளை ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், வேளாண்மை இணை இயக்குநர் கென்னடி ஜெபக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) செல்வம், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், அனைத்து துறைகளின் அலுவலர்கள் மற்றும் அனைத்து வட்டாரங்களின் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



# அண்ணாமலைப் பல்கலையில் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை



சிதம்பரம், அக். 30-

தமிழ்நாடு அரசின் தமிழ்வளர்ச்சித்துறை சார்பாக ஒவ்வொரு ஆண்டும் மாவட்டம் தோறும் நடத்தப்பெறும் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை இந்த கல்வியாண்டின் கடலூர் மாவட்ட நிகழ்வு அண்ணா மலைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு அலுவலர் கவிஞர் நெல்லை ஜெயந்தா மாணவர்களுக்குத் தமிழரின் மரபுபண்பாட்டை உணர்த்துதல், தமிழுக்குழைத்த சிந்தனையாளர்களை அறிமுகம் செய்து அவர்களின் உயரிய நோக்கினை எடுத்துரைத்தல், தமிழின் இலக்கியச் சுவையைக்காட்டுதல் என்னும் நோக்கில் இளையோர் இலக்கியப் பயிற்சிப்பாசறை தொடங்கப் பெற்றது என நோக்கவுரையில் கூறினார். தமிழியல் துறைத்தலைவர் முனைவர் ந. வெங்கடேசன் வரவேற்புரையாற்றினார். இந்திய மொழிப்புல முதன்மையர் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர் முதுமுனைவர் அரங்க. பாரி தலைமையுரையாற்றி மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். உச்சம் தொட்ட தமிழர்கள், கைநிறையக் கவிதைகள், மனம் மனம மறிய ஆவல், சீரிளமைத் திறம்வியப் போம், உணவுகளும் கனவுகளும், தமிழின் அருமை தமிழர்பெருமை என்னும் தலைப்புகளில் பேராசிரியர் முனைவர் வீ. பன்னீர்செல்வம், முனைவர் சு.தேன்மொழி, ஆதிரா முல்லை, கவிஞர் நெல்லை ஜெயந்தா, மருத்துவர் சு.செல்வமுத்துக்குமரன், முனைவர் ஆறு.அன்பரசன் ஆகியோர் உரையாற்றினர். நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சே. கல்பனா நன்றி கூறினார்.

பயிற்சிப் பாசறையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறை, வணிகவியல்துறை, சமூகவியல்துறை, அரசியல் அறிவியல்துறை, விலங்கியல்துறை, கடலூர் பெரியர்கலை மற்றும் அறிவியல் கல்லூரி, எம்.ஜி.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஸ்ரீராகவேந்திரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகியவற்றிலிருந்து 115 மாணவர்கள் பயிற்சி பாசறையில் கலந்து கொண்டனர். நிகழ்வின் தொடக்க விழாவில் கலைப்புல முதன்மையர் முனைவர் விஜயராணி, விலங்கியல் துறையின் இணைப்பேராசிரியர் முனைவர் செந்தில்முருகள், சமூகவியல் துறையின் இணைப்பேராசிரியர் முனைவர் முத்துக்குமார், தமிழியல் துறையின் முனைவர் பாலசுப்பிரணியம், முனைவர் செல்ல. பாலு, முனைவர் ரவிமுனைவர் ஜானகி இராசா, கடலூர் தமிழ்வளர்ச்சித் துறை அலுவலர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஆதரவற்றோர் மாணவர் இல்லத்தில் மாணவர்களுக்கு புத்தாடை, பட்டாசு வழங்கல்



கோவை, அக். 30-

கோவை பி.எஸ்.ஜி அறக்கட்டளை சார்பில் தீபாவளி திருநாளை முன்னிட்டு ஆதரவற்றோர் மாணவர் இல்லத்தில் பயிலும் மாணவர்களுக்கு புத்தாடைகள், பட்டாசுகள், மற்றும் இனிப்புகள் வழங்கி மாணவர்களுடன் தீபாவளி கொண்டாடப்பட்டது.

இது குறித்து நிர்வாகம் சார்பில் தெரிவிக்கவே மில் பி.எஸ்.ஜி அறக்கட்டளை சார்பில் மாணவர் இல்லம் கடந்த 1995ம் ஆண்டு தொடங்கப்பட்டதாகும். இதில் பெற்றோர் இல்லாத குழந்தைகள் தங்கிப் படித்து வருகின்றனர். பி.எஸ்.ஜி கல்வி நிறுவனங்களிலும் இந்த பள்ளியில் இருந்து வெளிவரும் தகுதியான மாணவர்களுக்கு உயர்கல்வி வழங்கப்படுகிறது. இந்த இல்லத்தில் தற்போது 208 மாணவர்கள் தங்கிப் படித்து வருகின்றனர். பி. எஸ்.ஜி கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள், இந்த மாணவர்களுக்கு புத்தாடைகள், இனிப்புகள் மற்றும் பட்டாசுகளை வழங்கினர். மாணவர்கள் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாத பட்டாசுகளை வெடித்து மகிழ்ந்தனர். மேலும் மாணவர்களுடன் தீபாவளி கொண்டாடியது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது என்று தெரிவித்தனர். நிகழ்ச்சியில் பி.எஸ்.ஜி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் எல்.கோபால கிருஷ்ணன், பி.எஸ்.ஜி கோர் நிறுவனத்தின் இயக்குநர் ருத்ரமூர்த்தி, பி.எஸ்.ஜி மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் இயக்குநர் ஸ்ரீவித்யா, அறக்கட்டளையைச் சேர்ந்த உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த தனியார் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# தீமைக்கு எதிரான வெற்றியை கொண்டாடும் தீபாவளி



ஒரு தமிழனுக்கு, தீபாவளி கொண்டாட்டம் என்பது அதிகாலையில் எண்ணெய் குளியலில் தொடங்கி இரவில் பட்டாசு வெடித்து முடிவடைகிறது. ஜவுளி கடைகள் மற்றும் இனிப்பு கடைகள் தீபாவளி ஷாப்பிங் வாடிக்கையாளர்களால் நிரம்பி வழியும். சிவகாசியில் பட்டாசுத் தொழிலின் உச்சகட்ட வியாபாரக் காலம் இது.

தீபாவளி திருவிழா அக்டோபர், நவம்பர் மாதங்களில் வருகிறது. தீபாவளி என்ற சொல் சமஸ்கிருத வார்த்தைகளான தீப் (விளக்கு) மற்றும் வாலி (வரிசை) ஆகியவற்றால் உருவானது. தமிழகத்தில் ஐந்து நாள் தீபாவளி கொண்டாட்டங்கள் சூரிய உதயத்திற்கு முன் எண்ணெய் குளியல் மூலம் தொடங்கும். இது கங்கையில் குளிப்பதற்கு ஒப்பானதாகக் கருதப்படுகிறது. எண்ணெய் என்பது ஒருவரிடம் உள்ள ஈகோ மற்றும் பொறாமை போன்ற தீய குணங்களைக் கழுவுவதற்கான அடையாளமாகும். குளித்த பின் புது உடை அணிந்து பூஜை செய்கின்றனர். விழாவுக்காக வீடுகள் சுத்தம் செய்யப்பட்டு, கோலங்கள், வெற்றிலைகள், காய்கள், பூக்கள் மற்றும் பழங்களால் அலங்கரிக்கப் படுகின்றன.

தீய சக்திகளை விரட்ட களிமண் விளக்குகளான தீபங்கள் ஏற்றப்படுகின்றன. தீமைக்கு எதிரான நன்மையின் வெற்றியைக் கொண்டாட பட்டாசுகளும் வெடிக்கப்படுகின்றன. தமிழகத்தில் உள்ள உணவகங்கள் தீபாவளி இனிப்புகளால் நிரம்பி வழியும். பூந்தி, பால்கோவா, உக்கரை, ஓமப்பொடி, ஜாங்கிரி, வெள்ளை அப்பம் மற்றும் முறுக்கு ஆகியவை மெனுவில் உள்ள சில உணவுகளில் அடங்கும். வரலாற்றின் படி, தீபாவளி என்பது இந்து நாட்காட்டியின் கார்த்திகை மாதத்தில் வரும் கோடை அறுவடைத் திருவிழாவாகத் தொடங்கியது. ஸ்கந்த புராணம் மற்றும் பத்ம புராணத்தின்படி 1ஆம் நூற்றாண்டு சிணி சமஸ்கிருத நூல்களில் இந்த விழா பற்றிய குறிப்பு உள்ளது. 11ஆம் நூற்றாண்டின் பயணி அல் பிருனி தனது நினைவுக் குறிப்பில் தீபாவளி திருவிழாவின் ஒளியை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

வட இந்தியாவில், அசுரன் ராவணனைக் கொன்று 14 ஆண்டுகள் வனவாசத்திற்குப் பிறகு ராமர் தனது ராஜ்யத்திற்குத் திரும்பியதைக் கொண்டாடும் ஒரு தருணமாக தீபாவளி கருதப்படுகிறது. தமிழ்நாடு உட்பட தென்னிந்தியாவில், இது அரக்கன் நரகாசுரன் எதிராக கிருஷ்ணர் மற்றும் தேவி சத்தியபாமாவின் வெற்றியாகக் கொண்டாடப்படுகிறது. புதுமணத் தம்பதிகளுக்கு, தல தீபாவளி அல்லது திருமணத்திற்குப் பிறகு அவர்களின் முதல் தீபாவளி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் தம்பதிகள் ஆசீர்வாதங்கள் மற்றும் பரிசுகளால் மகிழ்கிறார்கள்.

# தூய்மை காவலர்களுக்கு புத்தாடைகள் வழங்கும் நிகழ்ச்சி



கோவை, அக். 30-

கோவை பூமார்க்கெட் பகுதியில் உள்ள 70வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தீபாவளி திருநாளை முன்னிட்டு தூய்மை காவலர்களுக்கு புத்தாடைகள் மற்றும் இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சி திமுக வட்ட கழக செயலாளர் ஆ.சுரேஷ் நாராயணன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 70வது வார்டு சர்மிளா சுரேஷ் நாராயணன், பெரியகடைவீதி பகுதி 1 பகுதி செயலாளர் மார்கெட் மனோகரன் கவுன்சிலர், பகுதி துணை செயலாளர் முத்துமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பின்னர் தீபாவளி திருநாளை மிகவும் பாதுகாப்புடனும் மிகவும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடுங்கள் என்று அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்தனர். அதனைத்தொடர்ந்து 50கும் மேற்பட்ட ஆண், பெண் தூய்மை காவலர்களுக்கு புத்தாடைகள் மற்றும் இனிப்புகள் வழங்கினார்கள். ஏதோ தீபாவளிக்கு புத்தாடைகள் வழங்கவேண்டுமென்று கடமைக்கு வழங்காமல் ஆண்களின் மேலாடைகளின் அளவு எடுத்து அனைவருக்கும் பொருந்தும்படியான புத்தாடைகள் வழங்கியது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியில் கனகராஜ், மாநகர் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் வெங்கடேசன், சந்திரன், சிவா சீனிவாசன், தினேஷ், ரவி, ரங்கநாதன், ரேஷன், சிவா, காளிதாஸ், நாதமாணிக்கம், வெங்கடேஷ், உமாபதி, சண்முகம், வல்லவன் கோதை, ரூபன், அருணாச்சலம், பாஸ்கர், ஜெயபால், மாணிக்கம், சுரேஷ், லட்சுமணன், மகளிர் அணி பாலசுப்பிரமணியம் ரமணி, லட்சுமி, புவனா, மகாலட்சுமி, பத்மாவதி, கவிதா, பத்மாவதி, ரீட்டா, மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், தூய்மை காவலர்கள், கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# ஊராட்சி அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்த அமைச்சர்



திருவண்ணாமலை, அக். 30-

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் புனரமைக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்தார்கள். உடன் தமிழ்நாடு சட்டப் பேரவை துணைத்தலைவர் பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் சரவணன் (கலசப்பாக்கம்), ஜோதி (செய்யாறு) ஆகியோர் உடனிருந்தனர்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் இன்றையதினம் புனரமைக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி அலுவலக கட்டிடம் மற்றும் கல்வெட்டினை திறந்து வைத்து குத்துவிளக்கேற்றி அலுவலகத்தை பார்வையிட்டார்கள். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதல் படி, பொதுப் பணித்துறை அமைச்சர் திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு மக்கள் நல திட்டங்களை செயல்படுத்தியும், புதிய கட்டிடங்களையும் திறந்து வைத்து வருகிறார்கள். அதன்தொடர்ச்சியாக மாவட்ட ஊராட்சி அலுவலக கட்டிடத்தினை திறந்து வைத்த பொதுப்பணித்துறை அமைச்சருக்கு மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்களும் நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) மணி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனிவாசன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் பாரதி ராமஜெயம், மாவட்ட ஊராட்சிச் செயலர் ரவிச்சந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர் மிருனாளினி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# புதுச்சேரி அரசு ஊழியர்களுக்கு 3 சதவீத அகவிலைப்படி உயர்வு

சென்னை, அக்.30-

தீபாவளியை முன்னிட்டு மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி 3 சதவீதம் உயர்த்தப்பட்டது. அதுபோல் தமிழக அரசும் அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்தியது.

இந்த நிலையில் மத்திய அரசின் உத்தரவை பின்பற்றி, புதுச்சேரியில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கு மேலும் 3 சதவீதம் அகவிலைப்படி உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை நிதி துறை சார்பு செயலர் சிவக்குமார் வெளியிட்டுள்ளார். இந்த உத்தரவு அனைத்து துறை தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதன் மூலம் புதுவை அரசு ஊழியர்களுக்கு குறைந்தபட்சம் ரூ.580 முதல் ரூ.6 ஆயிரத்து 800 வரை கிடைக்கும்.

இந்த அகவிலைப்படி உயர்வு ஜூலை 1ந்தேதி முதல் முன்தேதியிட்டு வழங்கப்படும். இதன் மூலம் 20 ஆயிரம் புதுவை அரசு ஊழியர்கள் பயன் பெறுவார்கள். இதனால் அரசுக்கு ரூ.16 கோடி கூடுதலாக செலவாகும்.

# தடையை மீறி பட்டாசு வெடித்தால் வழக்கு பாயும்: போலீசார் எச்சரிக்கை

சென்னை, அக்.30-

தீபாவளி பண்டிகை அன்று காலை 6 மணி முதல் 7 மணி வரையிலும், இரவு 7 மணி முதல் 8 மணி வரையிலும் மட்டுமே பட்டாசு வெடிக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

இதனை மீறி பட்டாசு வெடிப்பவர்கள் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்து வருகிறார்கள். இந்த ஆண்டும் அதுபோன்று தடையை மீறி பட்டாசு வெடித்தால் வழக்கு பாயும் என்று போலீஸ் அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே பொதுமக்கள் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை தாண்டி பட்டாசு வெடிக்க வேண்டாம் என்றும் போலீசார் கேட்டுக் கொண்டு உள்ளனர்.

இதுதொடர்பாக சென்னை மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிற்கிணங்க குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே பட்டாசுகளை வெடிக்க வேண்டும்.125 டெசிபல் அளவுக்கு மேல் ஓசை எழுப்பக்கூடிய பட்டாசுகள், தடை செய்யப்பட்ட சீன தயாரிப்பு வெடிகளை வெடிக்கக் கூடாது.

தீ விபத்து ஏற்பட்டால் அவசர உதவி 100, தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை அவசர உதவி எண்.101, அவசர மருத்துவ உதவிக்கு ஆம்புலன்ஸ் எண்.108, தேசிய உதவி எண்.112, ஆகியவற்றை உடனடியாக தொடர்பு கொள்ள வேண்டும்.

கடந்த 2023ம் ஆண்டு கனம் சுப்ரீம் கோர்ட்டு அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கு அப்பாற்பட்டு பட்டாசு வெடித்தது தொடர்பாக 554 வழக்குகளும், தமிழக அரசின் விதிமுறைகளை மீறி பட்டாசு கடை நடத்தியது தொடர்பாக 8 வழக்குகளும், அனுமதிக்கப்பட்ட ஒலி அளவை மீறிய பட்டாசுகள் வெடித்தது தொடர்பாக 19 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டு குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# துப்புரவு தொழிலாளர்களுக்கு தீபாவளி பரிசு வழங்கல்





ராமநாதபுரம், அக். 30-

ராமேஸ்வரம் அடுத்த மண்டபம் பேரூராட்சியில் தீபாவளி தொகுப்புகள் அடங்கிய பரிசினை துப்புரவு தொழிலாளர்களுக்கு பேரூராட்சி தலைவர் வழங்கினார்.

தமிழகம் முழுவதும் தீபாவளி திருநாள் நாளை கொண்டாடும் நிலையில் இன்று மண்டபம் பேரூராட்சியில் பேரூராட்சி தலைவர் ராஜா தீபாவளி தொகுப்பு மற்றும் இனிப்புகளை பேரூராட்சி பணியாளர்களுக்கு வழங்கினார். பின்பு பேரூராட்சி பணியாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்தியாவின் ஒற்றுமையை பாதுகாக்க வேண்டி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் மண்டபம் இளநிலை உதவியாளர் முனியசாமி, பேரூராட்சி கவுன்சிலர்கள், பணியாளர்கள் உடன் இருந்தனர்.

**தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்**

# பல பெயர்களில் மின் கட்டணம் வசூலிப்பது மக்களிடம் கொள்ளை அடிப்பதற்கு சமம்

## முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி குற்றச்சாட்டு

**புதுச்சேரி, அக். 30–**

மின் துறையில் பயன் படுத்திய மின்சாரத்துக்கு மட்டும் கட்டணம் வசூலிக்காமல், பல பெயர்களில் கட்டணம் வசூலிக்கப்படுவது என்பது மக்களிடம் கொள்ளை அடிப்பதற்கு சமமாகும் என, முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.



புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி நிருபர்களிடம் கூறியதாவது, புதுச்சேரியில் விடியும் வரை இயங்கிய ரெஸ்டோபாரை அப்பகுதி இளைஞர்கள், பொது மக்கள் சேர்ந்து விரட்டி மூடி உள்ளனர். பள்ளி, கல்லூரி குடியிருப்பு பகுதியில் உள்ள ரெஸ்டோ பார்களை அகற்ற வேண்டும் என நாங்கள் தொடர்ந்து கூறி வருகிறோம். கலாச்சாரம், சட்ட ஒழுங்கு சீர்குலைவை ஏற்படுத்தும் ரெஸ்டோ பார்களுக்கு தொடர்ந்து புதுவை அரசு அனுமதி அளித்து வருகிறது.

2026ல் 'இண்டியா' கூட்டணி ஆட்சி பொறுப் பேற்றவுடன் அனைத்து ரெஸ்டோ பார்களும் மூடப்படும். பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள பார்களையும் அகற்றுவோம். புதுவை மாநிலத்தில் ஆதிதிராவிட மக்களுக்கான திட்டங்கள் அனைத்தும் முழுமையாக சென்றடையவில்லை என கவர்னர் கைலாஷ்நாதன் நேரடியாக அரசு மீது அதிருப்தி தெரிவித்துள்ளார். இதன் மூலம் அரசு மீது நாங்கள் கூறிய குற்றச்சாட்டுகள் உண்மையாகி உள்ளன.

புதுவைக்கு வந்த மத்திய மின்துறை அமைச்சர் மனோகர் லாலிடம் மின் துறையை தனியார் மயமாக்கக்கூடாது என்று முதலமைச்சரோ, சம்பந்தப் பட்ட துறை அமைச்சரோ வலியுறுத்தவில்லை. இதிலிருந்து மின்துறையை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவில் அரசு உள்ளது என தெளிவாகிறது. இதனால் மின் துறை ஊழியர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். பயன் படுத்திய மின்சாரத்துக்கு மட்டும் கட்டணம் வசூலிக்காமல் பல பெயர்களில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இது மக்களிடம் கொள்ளை அடிப்பதற்கு சமம்.

தீபாவளிக்கு இலவச அரிசி, சர்க்கரை, மலிவு விலை மளிகை பொருட்களை முதலமைச்சர் ரங்கசாமி அறிவித்தார். ஆனால் அவை இதுவரை மக்களுக்கு வழங்கப்படவில்லை.

தேர்தலின்போது ரூ.4 கோடி பறிமுதல் செய்யப் பட்ட விவகாரத்தில் பாஜக தலைவர் செல்வகணபதி எம்.பி.,க்கு சி.பி.சி.ஐ.டி., நோட்டீஸ் அனுப்பி உள்ளது. ஆனால் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்க 3 மாத கால அவகாசம் கேட்டு அவர் கடிதம் கொடுத்துள்ளார். விசாரணை வளையத்துக்குள் கொண்டுவரப் பட்ட அவர் தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்.

சென்டாக்கில் தொடர்ந்து பல முறைகேடுகள் நடந்து வருகிறது. என்.ஆர்.ஐ., ஒதுக்கீட்டில் 12 பேர் போலி சான்றிதழ் அளித்து மருத்துவ கல்லூரியில் சேர்ந்துள்ளனர். அவர்களின் சேர்க்கை அனுமதியை ரத்து செய்துள்ளனர். வெளிநாட்டு தூதரக முத்திரையை பயன்படுத்தி போலி சான்றிதழ் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு அவர்கள் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதை செய்தது யார் என கண்டறிய வேண்டும். இதற்காக சி.பி.ஐ., விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். இதில் போலி சான்றிதழ்களுக்காக பல லட்சம் கை மாறி உள்ளது.

புதிதாக தமிழக வெற்றி கழகம் என்ற கட்சியை தொடங்கி மாநாடு நடத்திய விஜய் மதச்சார்பின்மை, சிறுபான்மையினர் பாதுகாப்பு, ஜாதிவாரி கணக்கெடுப்பு, காமராஜர், பெரியார் பற்றியெல்லாம் பேசி உள்ளார். மாநாட்டில் அவர் எந்த புதிய கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. அனைத்து அரசியல் கட்சிகளும் கூறிவரும் மதவாதம் ஒழிப்பு, நீட் ஒழிப்பு, ஊழலற்ற நிர்வாகம் ஆகியவற்றைத் தான் கூறியுள்ளார்.

புதிய கொள்கை தொடர்பாக ஒன்று கூட கூறவில்லை. அவர் புதிய அரசியல் பாதை அமைப்பார் என்று மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், எதுவும் இல்லை. இருப்பினும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இறுதி முடிவு எடுக்க வேண்டியது மக்கள்தான். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. இவ்வாறு நாராயணசாமி கூறினார்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தின் வாயிலாக மாவட்ட ஆட்சித்தலைவர்சிபி ஆதித்யா செந்தில்குமார் தாட்கோ மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் தூய்மை பணியாளர் நல வாரியம் மூலம் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், மாவட்ட தாட்கோ மேலாளர் லோகநாதன், உதவி ஆணையாளர் (கலால்) சந்திரகுமார், துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) தனலட்சுமி.

# தவளக்குப்பம் ராஜீவ்காந்தி அரசு கல்லூரியில் ரூ.55 லட்சத்தில் மேம்பாட்டு பணி

## சபாநாயகர் செல்வம் தொடங்கி வைப்பு



**புதுச்சேரி, அக். 30–**

தவளக்குப்பம் ராஜீவ்காந்தி அரசு கலை, அறிவியல் கல்லூரியில் கட்டிடங்களை மேம்படுத்தும் பணிக்காக ராஷ்ட்ரிய உச்சதர் சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் ரூ.54 லட்சத்து 74 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் கல்லூரியில் கிழக்கு மற்றும் தெற்கு பகுதியில் உள்ள கட்டிடங்களை புனரமைத்தலும், அதே பகுதியில் சுற்றுச்சுவர் கட்டுதல் பணிகள் நடைபெற உள்ளது. இந்த பணிக்கான பூமி பூஜை நேற்று நடந்தது. சபாநாயகர் செல்வம் கலந்து கொண்டு பூமி பூஜை செய்து மேம்பாட்டு பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை சிறப்பு கட்டிட கோட்டம் 2 உதவி பொறியாளர் விக்டோரியா, கல்லூரி முதல்வர் ஹென்னா மோனிஷா ரூசா, ஒருங்கிணைப்பாளர் உமா மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், பாரதிய ஜனதா மாநில விவசாய அணி தலைவர் ராமு, மாவட்ட தலைவர் சுகுமாரன், கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# ஆதரவற்ற குழந்தைகளுக்கு தீபாவளி டிரஸ்



**சங்கரன்கோவில், அக். 30–**

தென்காசி வடக்கு மாவட்டத்தில் உள்ள 300 சிறப்பு குழந்தைகளுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 4ம் ஆண்டாக புத்தாடைகளை வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ வழங்கினார்.

தென்காசி வடக்கு மாவட்டத்தில் உள்ள வாசுதேவநல்லூர் சிவந்தி ஆதித்தனார் சிறப்பு பள்ளி, பிளசிங் சிறப்பு பள்ளி, சேர்ந்தமரம் அரசு சிறப்பு குழந்தைகள் பள்ளி, சங்கரன்கோவில் அரசு சிறப்பு குழந்தைகள் பள்ளி மற்றும் சங்கரன்கோவில் விண்மீன் காப்பகத்தில் உள்ள குழந்தைகள் உள்ளிட்ட 300 சிறப்பு குழந்தைகளுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புத்தாடைகளை வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ வழங்கினார். தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக விண்மீன்கள் பள்ளியில் உள்ள குழந்தைகளை நேரடியாக கடைக்கு அழைத்துச் சென்று அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப புத்தாடைகளை எடுத்துக்கொள்ள செய்தார். இதனால் அந்த குழந்தைகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் சரவணன், சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ், ஒன்றிய செயலாளர் பெரிய துரை, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராயல் கார்த்தி, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் வீரமணி, மாரிக்குட்டி, ஜெயக்குமார், கார்த்தி, பாலாஜி மற்றும் விண்மீன்கள் இல்ல பணியாளர்கள் மற்றும் சிறப்பு குழந்தைகள் கலந்துகொண்டனர்.

# சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேரணி




**ராமநாதபுரம், அக். 30–**

தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை மற்றும் பருவநிலை மாற்றம் துறை சார்பாகவும், ராமநாதபுரம் மாவட்ட தேசிய பசுமைப் படை இயக்கம் சார்பாகவும், ராமநாதபுரம் வருவாய் மாவட்ட அளவிலான சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வுப் பேரணி கீழக்கரை ஹமீதியா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. விழிப்புணர்வுப் பேரணியில் கீழக்கரை நகர் பள்ளிகளில் இருந்து சுமார் 200க்கும் மேற்பட்ட பள்ளி மாணவிகள் கலந்துகொண்டனர். விழிப்புணர்வுப் பேரணியில் வருகின்ற தீபாவளி பண்டிகையை விபத்து இல்லாமலும், மாசு இல்லாமலும் கொண்டாடுவோம் என கோஷங்கள் எழுப்பப்பட்டன. விழிப்புணர்வுப் பேரணியை கீழக்கரை வனச்சரக அலுவலர் செந்தில்குமார் தலைமையேற்று துவக்கி வைத்தார்கள். மேலும் இந்நிகழ்விற்கு பள்ளியின் தலைமை ஆசிரியை ஜாக்குலின் லதா முன்னிலை வைத்தார். மேலும் இந்நிகழ்வில் கீழக்கரை வனச்சரகர் ராஜேஷ் குமார் அவர்கள், நிஷா பவுண்டேஷன் நிர்வாகி சித்திக், பள்ளியின் மேலாளர், பள்ளியின் தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் சகிலா கலந்துகொண்டனர். விழிப்புணர்வுப் பேரணிக்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் ராமநாதபுரம் மாவட்ட தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் பெர்னாடிட் அவர்கள் சிறப்பாக செய்திருந்தார். அனைத்து நிகழ்வுகளையும் தேசிய பசுமைப் படையின் பரமக்குடி கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தீனதயாளன் ஒருங்கிணைத்தார். மேலும் நிறைவாக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தொடர்பான உறுதிமொழியை அனைவரும் ஏற்றனர். நிறைவாக ஹமீதியா பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் ஷகிலா நன்றியுரை ஆற்றினார்.

# குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் திறப்பு



**புதுச்சேரி, அக். 30–**

புதுச்சேரி கதிர்காம தொகுதி எல்லைப் பிள்ளை சாவடியில் அய்யனார் கோவில் வீதி குடிநீர் இரவை நிலைய வளாகத்தில் புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் பதினோரு புள்ளி 50 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமியால் திறந்து வைக்கப்பட்டு பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் 20 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் கேன் பொதுமக்களுக்கு 7 ரூபாய்க்கு விநியோக செய்யப்படும். இதன் மூலம் புதுச்சேரி கதிர்காம தொகுதிக்கு உட்பட்ட செல்லப்பிள்ளை சாவடி, தந்தை பெரியார் நகர், சாரதாம்பாள் நகர், ரத்னா நகர், நந்தா நகர், விவேகானந்தா நகர், கோல்டன் அவென்யூ, மோகன் நகர், பவள நகர் அதை சுற்றியுள்ள பொதுமக்கள் பயன்பெற்றனர். இவ் விழாவுக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன் தலைமை வகித்தார். கதிர்காம சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கேஎஸ்பி ரமேஷ் முன்னிலை வகித்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் டாக்டர் எம் தீன தயாளன், கண்காணிப்பு பொறியாளர் வட்டம் இரண்டு கே வீரச்செல்வன், பொது கோட்டை பொதுச் செயலாளர் உமாபதி, உதவி பொறியாளர் அன்பரசன், இளநிலை பொறியாளர் எஸ் ரமேஷ் குமார் மற்றும் கதிர்காமம் தொகுதி பொதுமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# புதிதாக தேர்வு செய்யப்பட்ட 131 ஆசிரியர்களுக்கு பணி ஆணை

## முதலமைச்சர் ரங்கசாமி வழங்கினார்



**புதுச்சேரி, அக். 30–**

புதுச்சேரியில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட 131 தொடக்க பள்ளி ஆசிரியர்களுக்கு முதலமைச்சர் ரங்கசாமி பணி ஆணை வழங்கினார்.

புதுச்சேரி பள்ளி கல்வித்துறையில் தொடக்க பள்ளி ஆசிரியர்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்ப கடந்த ஆண்டு அக்டோபர் மற்றும் கடந்த மார்ச் மாதம் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி 147 தொடக்கப்பள்ளி ஆசிரியர் பதவிக்கு, 131 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் 114 பேர் காரைக்காலிலும் 17 பேர் மாகிக்கு என மொத்தம் 131 பேருக்கு பணி ஆணை வழங்கும் நிகழ்ச்சி காமராஜர் மணிமண்டபத்தில் நேற்று நடந்தது.

முதலமைச்சர் ரங்கசாமி தலைமை தாங்கி அனைத்து ஆசிரியர்களுக்கும் பணி ஆணைகள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் சபாநாயகர் செல்வம், கல்வித் துறை அமைச்சர் நமச்சிவாயம், பள்ளி கல்வித்துறை இயக்குநர் பிரியதர்ஷினி, துணை இயக்குநர் சிவகாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# முதியவர்களுக்கு போர்வை வழங்கல்



**புதுச்சேரி, அக். 30–**

புதுவை உயிர்த்துளி ரத்ததான அமைப்பு ஏற்பாடு செய்த மாற்றுத்திறனாளிகள் ஏழை எளிய முதியோர்கள் மற்றும் தெருவோரங்களில் வசிக்கும் மக்கள் இவர்களுடன் தீபாவளி கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. புதுவை நெல்லித்தோப்பு கீர்த்தி மகால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பூரணாங்குப்பம் தனசுந்தரம்பாள் சாரிடபிள் சொசைட்டி சார்பாக 100 முதியோர்களுக்கு போர்வை வழங்கப்பட்டது. தீபாவளி கொண்டாட்டம் உயிர்த்துளி பிரபு தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாக காவல்துறை ஆய்வாளர் கீர்த்தி, நண்பர்கள் தோட்டம் சுந்தர முருகன் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பு செய்தார்கள். ஸ்ரீஷிசி சொசைட்டி தன்னார்வளர்கள் பூரணாங்குப்பம் பனை ஆனந்தன் தலைமையில் வண்டிமுத்து, பிரவீன் குமார், கோபிநாத், எழிலரசன், சிவச்சந்திரன், ஆகியோர் போர்வை வழங்கினார்கள்.

# புதுவை மாநிலக் கூட்டுறவு நுகர்வோர் இணையம்

## கான்பெட் கூட்டுறவு பட்டாசு கடை

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கான்பெட் கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் பட்டாசு அங்காடி துவங்கப்பட உள்ளதால் பொதுமக்கள் அனை வருக்கும் பட்டாசுகள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த பட்டாசு அங்காடி வருகின்ற அக்டோபர் மாதம் 18ம் தேதி முதல் 30ம் தேதி வரை நடைபெற உள்ளது. மேலும், இந்த அங்காடி பட்டாசுக் கடை புதுச்சேரி ராஜீவ்காந்தி சிலை அருகில், இசிஆர் சாலையில் உள்ள மாக்கெட் கமிட்டி மைதானம் மற்றும் புதுச்சேரி எம்.ஜி.ரோடு, அமுதசுரபி போன்ற இடங்களில் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு வருகின்ற 12/10/2024 அன்று மாலை 6,30 மணிக்குமேல் கடற்கரை சாலை, தலைமைச் செயலகம் எதிரில் நடைபெறும் வானவேடிக்கை நிகழ்ச்சியில் அனைத்து பட்டாசு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இந்த வானவேடிக்கை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு கான்பெட் கூட்டுறவு கேட்டுக் கொள்ளப்படுகிறது. No.2924/DIP/AD(PRESS)/PRA/2024-25 Dated: 07.10.2024

# அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து

## அரியாங்குப்பம், புதுச்சேரி.

### மக்கள் சேவையில் மகத்தான பணிகள்

அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து 24.36 சதுர கி. மீ பரப்பளவு கொண்ட 14 கிராம பஞ்சாயத்துகளை உள்ளடக்கிய 72,055 மக்கள் தொகையினை கொண்டது.

அரியாங்குப்பம் கொம்யூன் நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு தினமும் மூன்று வேலை சுகாதாரமான குடிநீர் வழங்கப்படுகிறது.

அரியாங்குப்பம் கொம்யூன் நிர்வாக எல்லைக்குட்பட்ட நகர பகுதிகளில் உருவாகும் குப்பைகளை Swatchata Corporation மூலமும் கிராம பகுதிகளில் உருவாகும் குப்பைகளை HR Square நிறுவனம் மூலமும் அப்புறப்படுத்தப்படுகிறது.

பொது மக்களை டெங்கு மற்றும் மலேரியா நோய்களில் இருந்து காப்பாற்றும் பொருட்டு கொசு மருந்து அனைத்து பகுதிகளிலும் தெளிக்கப்பட்டுள்ளது.

மணவெளி சட்டமன்ற தொகுதியில் 24 வளர்ச்சி பணிகள் ரூபாய் 205 லட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

அரியாங்குப்பம் சட்டமன்ற தொகுதியில் 16 வளர்ச்சி பணிகள் ரூபாய் 145 லட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

வரும் மழைக்காலத்தினை முன்னிட்டு அனைத்து வாய்க்கால்களும் படிப்படியாக தூர்வாரப்பட்டுவருகிறது.

அபிஷேகப்பாக்கம் குடிநீர் பற்றாக்குறையை போக்குவதற்காக அபிஷேகப்பாக்கம் நோணாங்குப்பம், வீராம்பட்டினம் மற்றும் மணவெளி ஆகிய பகுதிகளில் 5 ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளது

மாண்புமிகு திரு வெ. வைத்திலிங்கம் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பட்டு நிதியின் கீழ் ரூபாய் 70.00 லட்சம் மதிப்பீட்டில் அரியாங்குப்பம் பெருந்தலைவர் கு.காமராஜர் திருமண மண்டபமத்திற்கு சமையற்கூட உபகரணங்கலும் மற்றும் மணவெளி பெ. புருசோத்தமன் சமுதாய நலக்கூடதிற்கு சமையற்கூட உபகரணம் மற்றும் மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளது

### வரும் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள்

வரும் நிதி ஆண்டில் பிரதம மந்திரி கிராம சாலை திட்டத்தின் கீழ் பூரணான்குப்பம் கல்லூரி சாலை, தவளக்குப்பம் திருமலைவாசன் நகர் & கொருக்கமேடு கல்லறை வீதி மற்றும் நாணமேடு சாலை பணிகள் 150 லட்சம் தோராய மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

வரும் நிதி ஆண்டில் மணவெளி சட்டமன்ற தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் மூலம் சாலை பணிகள் ரூபாய் 200 லட்சம் செலவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

வரும் நிதி ஆண்டில் அரியாங்குப்பம் சட்டமன்ற தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் மூலம் ரூபாய் 102 லட்சம் செலவில் சாலை பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

அரியாங்குப்பம் சட்ட மன்ற உறுப்பினர் வேண்டுகோளின் படி இளைஞர்களின் நலனுக்காக R.K நகரில் பொது நூலக கட்டிடம் ரூபாய் 108 லட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு S.செல்வகணபதி அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

**V.ரமேஷ்**
ஆணையர்

**தூய்மை பழக்கம் தார்மீக ஒழுக்கம்!**
**குப்பைகளை தெருவிலோ பொது இடங்களிலோ வீசி செல்லாதீர்!!**
**குடிநீரை சிக்கனமாக பயன்படுத்தி நிலத்தடி நீர் விரயத்தை தவிர்ப்போம்!!!!**

No.2924/DIP/AD(PRESS)/PRA/2024-25 Dated: 07.10.2024

## புதுச்சேரி அரசு

# வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை

### I) மாநில அரசின் நிதி உதவி திட்டங்கள் (CPT)

### பயிர் உற்பத்தி தொழில் நுட்பம் (CPT)

நெல், பயிறுவகை, எண்ணெய் வித்துக்கள், சிறுதானியங்கள் மற்றும் கரும்புக்கு பயிர் சாகுபடிக்கு உற்பத்தி ஊக்கத்தொகை வழங்குவதோடு மட்டுமின்றி, வயல்வெளி செயல் விளக்கங்கள், பயிற்சி முகாம்கள், கல்விச் சுற்றுலாக்கள், கருத்தரங்குகள், வேளாண் விழாக்கள், வேளாண் முகாம்கள் மற்றும் வேளாண் இடுபொருட்களாகிய விதை, உயிர்உரம் ஆகியவை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலமாக பயிர் சாகுபடியில் மகசூலை அதிகப்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

#### பயிர் சாகுபடிக்கு உற்பத்தி ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்

* சொர்ணவாரி மற்றும் சம்பா பருவத்தில் நெல் சாகுபடிக்கான உற்பத்தி ஊக்கத்தொகை (அ) சம்பா மற்றும் நவரை பருவத்தில் நெல் சாகுபடிக்கான உற்பத்தி ஊக்கத் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.5,000/– வீதம் ரூ.10,000/– மானியமாக பொதுப்பிரிவு விவசாயிகளுக்கும், ரூ.6,000/– வீதம் ரூ.12,000/– அட்டவணைப்பிரிவு விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது.
* சொர்ணவாரி மற்றும் சம்பா பருவத்தில் பாரம்பரிய நெல் சாகுபடிக்கான உற்பத்தி ஊக்கத்தொகை (அ) சம்பா மற்றும் நவரை பருவத்தில் பாரம்பரிய நெல் சாகுபடிக்கான உற்பத்தி ஊக்கத் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.8,000/– வீதம் ரூ.16,000/– மானியமாக பொதுப்பிரிவு விவசாயிகளுக்கும், ரூ.9,000/– வீதம் ரூ.18,000/– அட்டவணைப்பிரிவு விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது.
* கரும்பு மற்றும் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம் மானியமாக பொதுப்பிரிவு விவசாயிகளுக்கும், ரூ.11,000/– வீதம் அட்டவணைப்பிரிவு விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது.
* மணிலா சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ.8,000/– மானியமாக பொதுப்பிரிவினருக்கும் ரூ.9,000/– அட்டவணை பிரிவினருக்கும் மானியமாக வழங்கப்படுகிறது.
* எள் சாகுபடிக்கான உற்பத்தி ஊக்கத்தொகை ஏக்கருக்கு ரூ.5,000/– மானியமாக பொதுப்பிரிவினருக்கும் ரூ.6,000/– அட்டவணை பிரிவினருக்கும் மானியமாக வழங்கப்படுகிறது.
* நவரைப் பருவத்தில் நெல்லுக்கு பதிலாக பயிறு வகைகள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியமாக ரூ.4,000/– பொதுப்பிரிவினருக்கும் ரூ.5,000/– அட்டவணை பிரிவினருக்கும் மானியமாக வழங்கப்படுகிறது.
* நவரைப் பருவத்தில் நெல்லுக்கு பதிலாக சிறுதானியம் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியமாக ரூ.7,000/– பொதுப்பிரிவினருக்கும், ரூ.8,000/– அட்டவணை பிரிவினருக்கும் வழங்கப்படுகிறது.
* நெல் விதை மானியமாக ஒரு கிலோவிற்கு ரூ.10/– என பொதுப்பிரிவு விவசாயிகளுக்கும் 75% வீதம் என அட்டவணைப் பிரிவு விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது.
* இயற்கை இடுபொருட்களான உயிர் ரக உரங்கள் மற்றும் உயிர் பூச்சி கொல்லிகள், பசுந்தாள் உர விதைகள் ஆகியவைகளுக்கு 75% வீதம் பொதுப்பிரிவு விவசாயிகளுக்கும், 100% வீதம் என அட்டவணைப்பிரிவு விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது.
* தீவனப்புல் உற்பத்தி மானியத் தொகை ஏக்கருக்கு ரூ.8,000/– வீதம் அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது.
* **Agri.Clinic - வேளாண் சுயதொழில் செய்வோருக்கான திட்டம்:** வேலையில்லா வேளாண் பட்டதாரிகளுக்கு வேளாண் தொழில் நுட்ப மையங்கள் அமைக்க நிதி வழங்கும் திட்டம் (ரூ.3,00,000 மிகாமல் ஒரு நபருக்கு) பொதுப்பிரிவினருக்கு 65% அட்டவணைப்பிரிவினருக்கு 100% வழங்கப்படுகிறது. வேளாண்மையில் ஓராண்டு டிப்ளமோ சான்றிதழ் படிப்பினை முடித்த வேலையில்லாதவர்களுக்கு நிதியுதவி (ரூ.75,000 மிகாமல் ஒரு நபருக்கு) பொதுப்பிரிவினருக்கும், 65% அட்டவணைப்பிரிவினருக்கு 100% வழங்கப்படுகிறது.
* **வேளாண் இலவச மின்சார திட்டம்:** பயிர் பாசனத்திற்கு இலவச மின்சார திட்டத்திற்கு 100% மானியமாக அனைத்து பிரிவு விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

### II) மத்திய அரசின் நிதியுதவி திட்டங்கள்

#### ➢ பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி (PM KISAN):

இதில் அனைத்து சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் ஆண்டுக்கு ரூ.6000/– வருமான ஆதரவு ஒவ்வொரு நான்கு மாதங்களுக்கும் தலா ரூ.2000/– வீதம் மூன்று சம தவணைகளில் வழங்கப்படுகிறது.

#### ➢ பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY):

மாநில அரசால் அறிவிக்கப்பட்ட பயிர்களான நெல், கரும்பு, மணிலா, உளுந்து, பச்சை பயிறு, வாழை, பருத்திக்கு விவசாயிகளுடைய பயிர் காப்பீடு பிரிமியம் தொகையை புதுச்சேரி அரசே செலுத்துகிறது.

#### ➢ தேசிய உணவு பாதுகாப்பு திட்டம்– எண்ணெய் வித்துக்கள் (NFSM-EO):

மத்திய அரசின் முக்கிய திட்டங்களில் ஒன்றான இத்திட்டத்தில், எண்ணெய் வித்துக்களான மணிலா மற்றும் எள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு விதை மானியமாக 50% வேளாண் களபள்ளி மற்றும் பயிற்சி வகுப்புகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

#### ➢ பாரம்பரிய விவசாய மேம்பாட்டுத் திட்டம் (PKVY):

பாரம்பரிய விவசாய மேம்பாட்டு திட்டம் மூலமாக புதுச்சேரி மாவட்டத்தில் 20 இயற்கை அங்கக வேளாண் சார்ந்த குழுக்களும், காரைக்கால் மாவட்டத்தில் 10 இயற்கை அங்கக வேளாண் சார்ந்த குழுக்களுமாக சேர்ந்து சுமார் 600 எக்டேர் பரப்பளவிற்கு இயற்கை வேளாண்மை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் பாரம்பரிய விவசாய மேம்பாட்டுத் திட்டம் மூலமாக ஆண்டுக்கு ரூ.5000/– எக்டேர் என மூன்றாண்டுகளுக்கு அங்கக வேளாண்மை இடுபொருட்களுக்கும் மற்றும் இடுபொருள் தயாரிக்கும் கொள்கலன்களுக்கும் நேரடி பயன்பரிமாற்ற முறையில் (DBT) வழங்க ஆவண செய்யப்பட்டுள்ளது.

#### ➢ வேளாண் தொழில் நுட்ப மேலாண்மை முகமை (ATMA):

வேளாண் தொழில் நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு புதிய வேளாண் தொழில் நுட்ப யுக்திகளை பயன்படுத்தும் நோக்கில் பல்வேறு பயிற்சிகள், செயல்விளக்கங்கள், கிசான்கோஸ்தி, கண்டுணர்வு சுற்றுலா ஆகியவை செயல்படுத்தப்படுகிறது.

சென்ற ஆண்டில் (2023–24) விவசாயிகளுக்கான தொழில்நுட்ப பயிற்சியின் மூலம் பயிற்சிக்கு ரூ.10,000/– வீதம் 105 பயிற்சிக்கு 10.5 இலட்சம் செலவிடப்பட்டது. இதில் சுமார் 4200 விவசாயிகள் பயனடைந்தனர். விவசாயிகளுக்கான செயல் விளக்கப்பயிற்சியின் மூலம் பயிற்சிக்கு ரூ.4,000/– வீதம் 173 செயல்விளக்கப்பயிற்சிக்கு 6.92 இலட்சம் செலவிடப்பட்டது. இதில் சுமார் 3500 விவசாயிகள் பயனடைந்தனர்.

விவசாயிகளுக்கான கண்டுணர்வு சுற்றுலா மூலம் சுற்றுலாவிற்கு ரூ.1,00,000/– வீதம் 8 சுற்றுலாவிற்கு 8 இலட்சம் செலவிடப்பட்டது. இதில் சுமார் 400 விவசாயிகள் பயனடைந்தனர்.

விவசாயிகளுக்கான கிசான்கோஸ்தி மூலம் ஒன்று ரூ.15,000/– வீதம் 11 கிசான்கோஸ்திக்கு 1.65 இலட்சம் செலவிடப்பட்டது. இதில் சுமார் 640 விவசாயிகள் பயனடைந்தனர்.

நவீன தொழில் நுட்பயுக்தியான ஆளில்லா வான் கருவிகள் மூலம் (ட்ரோன்) நானோ யூரியா வயலில் தெளிக்கும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் காய்கறி விதைகள், பயிர்வளர்ச்சி ஊக்கிகள், உயிர் உரங்கள் போன்ற விவசாயிகளுக்கு தேவையான பல்வேறு இடுபொருட்கள் விவசாயிகள் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் நோக்கில் வழங்கப்பட்டது. இவற்றிற்காக சுமார் 22.5 இலட்சம் செலவிடப்பட்டது. இதில் சுமார் 6700 விவசாயிகள் பயனடைந்தனர்.

**Dr.S.வசந்தகுமார், இயக்குனர்**

No.2924/DIP/AD(PRESS)/PRA/2024-25 Dated: 07.10.2024

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007



# முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை

# புதுச்சேரி அரசு ஊழியர்களுக்கு 3 சதவீத அகவிலைப்படி உயர்வு

# தடையை மீறி பட்டாசு வெடித்தால் வழக்கு பாயும்


# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com



• 30-10-2024 புதன்கிழமை •வெளியூர்: 31-10-2024 வியாழக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்